IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

C.C.NO.11/2025

DEPOSITION OF WITNESS P.W.1

| | | |
|---|---|---|
| NAME | : | SUNDRAMOORTHY |
| FATHER'S NAME | : | RAJAKILI |
| VILLAGE | : | KATPADI |
| OCCUPATION | : | NIL |
| AGE | : | 83 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 16th day of SEPTEMBER 2025.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது காட்பாடியில் வசித்து வருகிறேன். வயது மூப்பின் காரணமாக வேலை ஏதும் செய்யவில்லை. விபத்தில் இறந்து போன லட்சுமி எனது மனைவி. என் மனைவி மாலை நேரத்தில் வழக்கமாக கடைக்காக சென்று வருவது வழக்கம். 12.07.2024 ம் தேதி மாலை 6.30 மணியளவில் என் மனைவி கடைக்கு சென்றார். கிராணைட் கம்பெனி அருகே கண்டிபேடு என்ற இடத்தில் வரும்போது ஓரமாக ரோட்டை கடந்து வரும்போது தடம் எண் 20 அரசு பேருந்து என் மனைவி மீது மோதியதாக எனது ஊரை சேர்ந்த எனது மகன் அசோகன் என்பவருக்கு தகவல் சொல்லி என் மகன் எனக்கு தகவல் சொன்னார். சம்பவ இடத்திற்கு நானும் எனது மகனும் சென்று பார்த்தோம். என் மனைவிக்கு காதில் இரத்தம் வழிந்து கொண்டிருந்தது. இறந்த நிலையில் காணப்பட்டார் சுய நினைவு இல்லை. வலது பக்க காது ஓரம் அடிப்பட்டு இரத்தம் வழிந்துகொண்டிருந்தது. கன்னத்தில் சிராய்ப்பு காயம் காணப்பட்டது. பின்னர் என் மனைவி மீட்டு ஆம்புலன்ஸ் மூலமாக வேலூர் அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அங்கிருந்த மருத்துவரகள் பரிசோதித்து விட்டு எனது மனைவி ஏற்கனவே இறந்து விட்டதாக தகவல் சொன்னார்கள். சம்பவம் தொடர்பாக நான் சொல்ல சொல்ல எனது அக்கா மகன் புகார் எழுதினார். என்னிடம் காட்டப்படும் புகார் மனு என்னுடையது தான். அது அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. விபத்தை அணைக்கட்டை சேர்ந்த சுந்தர் என்ற டிரைவர் ஏற்படுத்தியதாக தெரிந்து கொண்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

பட்டியல்் சாட்சி 2 எனது மகன் ஆவார். பட்டியல் சாட்சி 3 எனது அக்கா மகன் ஆவார். பட்டியல் சாட்சி 4 எனது சித்தப்பா மகன் ஆவார். பட்டியல் சாட்சி 8 மற்றும் 9 எனது பேரண் ஆவார். என் மனைவிக்கு விபத்து ஏற்பட்டதாக தகவல் சொல்லும் போது வீட்டில் இருந்தேன். அப்போது மணி 7 இருக்கும். சம்பவ இடத்திற்கு நான் செல்லும் போது 7 மணி இருக்கும். நான் பார்க்கும் போது மழையாக இருந்தது

போலிசார் இருந்தார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள். எனக்கு எப்படி தகவல் தெரிந்தது என்று போலிசாரிடம் சொன்னேன். போலிசார் என்னிடம் எழுதி கையொப்பம் பெற்றார்கள். ஆம்புலன்ஸ் வரவழைத்து எனது மனைவியை மருத்துவமனை அனுப்பி வைத்தார்கள். என் மனைவி மாலை நேரத்தில் வழக்கமாக கடைக்குபோவதாக போலிசாரிடம் சொன்னேன். எனது மனைவி ஓரமாக செல்லும் போது விபத்து ஏற்பட்டதாக போலசாரிடமும் முதல் விசாரணையிலும் சொன்னேன். என் மனைவி ஓரமாக போகும் போது விபத்து ஏற்பட வில்லை என்றால் சரியல்ல. என் மனைவி தெற்கில் இருந்து வடக்கு நோக்கி சாலையின் குறுக்கே செல்லும் போது விபத்து ஏற்பட்டதாக கேள்விப்பட்டதாக புகாரில் சொன்னேன் என்றால் சரிதான். பஸ் மேற்கில் இருந்து கிழக்குநோக்கி வந்தாக புகாரில் சொன்னேன் என்றால் சரிதான். விபத்து நடக்கும் போது என் மனைவிக்கு 75 வயது இருக்கும். அவர் கண் பார்வை நன்றாக தெரியும். என் மனைவிக்கு 75 வயது என்பதால் கண் பார்வை தெரியாது என்றும் அவராக குறுக்கே சென்று என் மனைவியின் கவனகுறைவால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. அரசு பேருந்து மெதுவாக, சாலை கட்டுபாடுகள் கடைபிடித்து ஓட்டினார் என்றால் சாரியல்ல. அரசு பேருந்தின் ஓட்டுநார் கவன குறைவால் மற்றும் அஜாக்கிராதையால் விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

C.C.NO.11/2025

DEPOSITION OF WITNESS P.W.2

| | | |
|---|---|---|
| NAME | : | ASHOKAN |
| FATHER'S NAME | : | SUNDRAMOORTHY |
| VILLAGE | : | KATPADI |
| OCCUPATION | : | SECUERITY |
| AGE | : | 55 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 16th day of SEPTEMBER 2025.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது காட்பாடியில் வசித்து வருகிறேன். தனியார் காவலராக வேலை ஏதும் செய்யவில்லை. விபத்தில் இறந்து போன லட்சுமி எனது அம்மா.அ.சா.1 தெரியும் அவர் என் அப்பா. 12.07.2024 ம் தேதி நான் என் வீட்டில் இருந்தபோது எங்கள் ஊரை சேர்ந்த மனோகர் என்பவரின் மகன் போன் மூலமாக எனது அம்மாவிற்கு 20 நம்பர் பேருந்து மோதி விபத்து நடந்ததாக தகவல் சொன்னார். சம்பவ இடம் கிராணைட் கம்பெனி அமைந்துள்ள கண்டிபேடு இடமாகும். சம்பவ இடத்திற்கு நானும் எனது தந்தை சுந்தரமூர்த்தியும் பார்த்தோம். என் அம்மாவை சென்று பார்த்தபோது வலதுபக்க நெற்றியிலும் , முகத்திலும், அடிப்பட்டு இருந்தது. இறந்த நிலையில் காணப்பட்டார். எனது அம்மாவை ஆம்புலன்ஸ் மூலமாக வேலூர் அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். மருத்துவர்கள் பரிசோதித்து விட்டு எனது அம்மாவ இறந்துவிட்டதாக தகவல் சொன்னார்கள். சம்பவம் தொடர்பாக நடவடிக்கை எடுக்க எனது அப்பா புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

நானும் என் மனைவியும் தனியாகவும் தாய் தந்தை தனியாகவும் வசிக்கிறார்கள் என்றால் சரிதான். எனக்கு தகவல் வரும்போது 7 மணி

இருக்கும். என் வீட்டில் இருந்து என் அப்பா வீட்டிற்கு 7 கீமீ இருக்கும் நான் போய் தான் என் தந்தைக்கு தகவல் சொல்லி அவரை அழைத்தேன். சம்பவ இடத்திற்கு செல்லும் போது 8 மணி இருக்கும். என் அம்மாவிற்கு கண் நன்றாக தெரியும். கண் பார்வை தெரியாது என்றும் அவராக குறுக்கே சென்று என் அம்மாவிற்கு கவனகுறைவால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு, அவரால் உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 16.09.2025 ஆம் தேதி பகரப்பட்டது.

S K P DILIP BABU

Digitally signed by S K P DILIP BABU

நீதித்துறை நடுவர்,
காட்பாடி.